செ.வெ.எண்: 82 நாள் : 24.01.2011

# நியாய விலைக் கடைகளில் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமாயில் விலையைக் குறைக்க முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு.

## அரசு செய்தி வெளியீடு – 24.1.2011

விலைவாசி தாக்கத்திலிருந்து ஏழையெளிய பாமர மக்களைக் காத்திட 2007ஆம் ஆண்டு மே திங்கள் முதல் மானிய விலையில் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமாயில் ஆகியவற்றை நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தை இந்த அரசு தொடங்கி செயல்படுத்தி வருகின்றது. இந்த விலையை மேலும் குறைக்கும் நோக்கத்துடன், நியாயவிலைக் கடைகள் மூலமாக தற்போது விற்கப்படும் துவரம்பருப்பு மற்றும் உளுத்தம்பருப்பு இரண்டும் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 40 என்று விற்கப்படுவதிலிருந்து; கிலோ ஒன்றுக்கு ரூபாய் 30 என்று குறைத்தும், பாமாயில் லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 30 என்பதிலிருந்து 25 ரூபாயாகக் குறைத்தும் வரும் பிப்ரவரி 1–ந்தேதி முதல் நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்ய முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

* * *

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.